**அக்குறணை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 07 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அக்குறணை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபையிடம் உள்ள 07 காணித் துண்டுகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உரிமை மாற்றப்பட்டிராத ரூபா 26,891,063 பெறுமதியான 03 வாகனங்கள் நடைமுறையில்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

#### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 43,337,506 தொகையானதுடன் அதில் 01 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,896,804 தொகையாகக் காணப்பட்டது. 2016 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் அம் மீதிகளில் ரூபா 7,835,675 தொகை பெறவேண்டியதாகக் காணப்பட்டது.

#### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,681,099 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் தொகை ரூபா 5,595,912 ஆகக் காணப்பட்டது. 2016 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் அம் மீதிகளில் ரூபா 17,999,175 தொகையானதுடன் மேலும் செலுத்த வேண்டிய நிலையில் காணப்பட்டது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| | 218 | சபைக்குரித்தான சகல காணி கட்டிடங்களும் வருடாந்தம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | 571(2) | ரூபா 572,465 தொகையான காலாவதியான வைப்புகள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கைக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| | XXIV ஆம் அத்தியாயத்தின் 44 ஆம் பந்தி | மரணித்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ஒரு வருட காலம் கடந்த ரூபா 39,875 தொகையான இடர் கடன் மீதி தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | ஏனையவை | |
| | 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வர்த்தமானி அறிவித்தல் | 2011 முதல் 2015 வரையான காலப்பகுதியின் போது அங்கீகரிக்கப்பட்ட 388 கட்டிட விண்ணப்பங்களில் 346 விண்ணப்பங்களுக்காக இணக்கச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,037,958 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,464,938 ஆகக்

காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 5,426,980 தொகையால் குறைவு ஒன்று காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான முக்கிய விகிதாசாரங்கள் சில பின்வருமாறாகும்.

(அ) செயற்பாட்டு வருமான மிகை

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டின் போதுமான நிதி விளைவுகளின் மிகை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாகக் கருத்திற்கொள்கையில் அந் நூற்றுவீதத்தில் குறைவொன்று காண்பிக்கப்பட்டது.

(ஆ) மொத்த வருமானமும் மொத்த செலவினமும் ஒப்பிடல்

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மொத்த செலவினத்திற்கு மொத்த வருமானத்தின் சதவீதமாக சதவீதமாகக் கருத்திற்கொள்கையில் அதிகரிப்பொன்று காணப்பட்டதுடன் இது நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக திருப்திகரமான நிலையைக் காண்பித்திருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,928,427 தொகையான நிலுவை

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறான நிலுவை | பட்டியலிடப்பட்டவை | மிகைக் கட்டணம் | வழங்கப்பட்ட கழிவு பதிவழிப்பு | குறைவாகக் கிடைக்கப்பெற்றவை | பட்டியலிடப்பட்டவற்றிலிருந்து பெறுவனவு | 2015.12.31 இல் உள்ளவாறு நிலுவை மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 3,007,071 | 5,936,697 | 408,094 | 243,982 | 1,646,272 | 4,787,531 | 2,674,077 |
| ஏக்கர் வரி | 1,295 | 300 | 09 | -- | 1,295 | 300 | -- |
| குத்தகை வாடகை | 392,498 | 3,272,756 | 63,360 | 9,766 | 251,430 | 3,195,497 | 271,921 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | -- | 2,036,650 | -- | -- | -- | 2,036,650 | -- |
| ஏனைய கட்டணம் | 8,115,124 | 12,227,218 | 1,727 | 264,670 | 6,764,443 | 332,527 | 12,982,429 |
| **மொத்தம்** | | | | | | | 15,928,427 |

வருமான மீதி அவதானிக்கப்பட்டது.

### 2.3.2 வீதவரி

மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு ரூபா 3,007,071 தொகையான நிலுவை மீதி காணப்பட்டதுடன் பட்டியலிடப்பட்டவை ரூபா 5,936,697 ஆகக் காணப்பட்டன. இம் மீதிகளில் ஆண்டின் போதான அறவீடுகள் 54 சதவீதமாகவும் 80 சதவீதமாகவும் காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 2,674,077 தொகையான நிலுவை வீதவரி மீதி நிலவியது. இதில் ஒரு வருடத்தைப் பார்க்கிலும் கூடுதலான நிலுவை மீதி ரூபா 1,360,798 காணப்பட்ட போதிலும் இந் நிலுவையை அறவிடப்படுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 கடை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 271,921 தொகையான நிலுவை மீதி ஒன்று நிலவியதுடன் இந் நிலுவை மீதியில் 04 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 124,441 தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அக்குறணைச் சந்தைத் தொகுதியில் விறாந்தைக்கு உரிய பகுதியில் விற்பனை செய்யப்படுவதற்கான இயலுமை குறித்து ஆராயப்படாது குத்தகைக்கு வழங்கப்பட்டதன் காரணமாக சில மாதங்களாக வியாபாரம் கைவிடப்பட்டு வியாபாரம் மூடப்பட்டிருந்த போதிலும் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாது பட்டியல் இடப்பட்டிருந்தமையால் ரூபா 22,205 தொகையான கடை வாடகை மீதி நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியதாகக் காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணப் பெறுமதி ரூபா 12,976,004 தொகையாகக் காணப்பட்டது.

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

அதிகாரப் பிரதேசத்தில் வியாபார நிறுவகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வின் படி, 57 தொழில் மற்றும் வியாபார நிறுவகங்களிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிராததுடன் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஓர் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

மீளாய்வாண்டின் போது ரூபா 17,431,271 தொகை சுய ஆக்க வருமானமாக சபை உழைத்திருந்ததுடன், இதில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டிருந்த பெறுமதி ரூபா 5,324,216 தொகையாகக் காணப்பட்டது. இது சுய ஆக்க வருமானத்தின் 30.54 சதவீதமாகும்.

### 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

பிரதேச சபைக் கட்டிடத்தின் "வியாபாரப் பிரிவு" எனும் பெயரிடப்பட்டிருந்த கீழ் தளத்தின் பிரதான வீதிக்கு முகம்கொடுக்கும் 2150 சதுர அடியுடனான நில அளவு தற்போது 02 வருடங்களுக்கும் மேலான காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது மூடிவிடப்பட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது 53 அத்துமீறிய குடியிருப்புகள் இனங்காணப்பட்டு பதிவு செய்யப்பட்டு அத்துமீறிய அறிவித்தல்கள் மாத்திரம் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய எந்தவித தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அக்குறணை நகரத்தின் உள்ளக வீதிக்கு அருகாமையில் 2016 ஏப்ரல் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பாரிய அளவிலான அத்துமீறிய நிர்மாணிப்புகள் அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக குறித்த உத்தியோகத்தர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்லேவெலிகெடிய தெல்கொட வத்த வீதி அபிவிருத்தி - ரூபா 200,000

இது தொடர்பாக 2016 ஏப்ரல் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு மதகிற்காக 6"x9" அளவைப் பார்க்கிலும் பாரிய அளவிலான கற்களைப் பயன்படுத்தி நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) 1:5 சீமேந்து மண் கலவையைப் பயன்படுத்தி நிர்மாணித்து மதகின் வெளிப்பகுதி பூச்சிடப்பட வேண்டிய போதிலும் எளிதாக கையால் உடைக்கக் கூடிய நிலையில் மிகவும் குறைந்த கலவை பயன்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னுரிமைப் படி அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராமை

அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகையில் தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு அதன் தேவைகளுக்கு முன்னுரிமை தயாரிக்கப்பட்டு இதன் படி, நிர்மாணிப்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது அவ்வப்போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சர்களின் தீர்மானங்கள் அவ்வாறே செயற்படுத்தப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தது.

(இ) வடிகால்கள் நிர்மாணிக்கப்பட்டிராமை

வீதி கொங்கிரீட் இடப்படுகையில் வீதியின் இரு மருங்கிலும் நிர்மாணிக்கப்படுவதற்குத் திட்டமிடப்படாது கொங்கிரீட் வீதியின் தோள்பட்டைப்பகுதி நிரப்பப்பட்டு தயாரிக்கப்பட்டிராமையால் மழை நீர் வீதி முழுவதும் வழிந்தேடியமையால் வீதிக்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன், இதன் மூலம் பிரதேச மக்களிற்கும் வீதியில் பயணிக்கும் பயணிகளுக்கும் வாகனங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் எச்சரிக்கை நிலவுவது அவதானிக்கப்பட்டது.

### 3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதியில் வீதி ஓரங்களில் கொட்டப்படும் கழிவுகளைச் சேகரிப்பதற்காக முறையான நடைமுறை சபையால் செயற்படுத்தப்பட்டிராததன் காரணமாக நெடுந்தெருக்களின் இருமருங்கிலும் அகற்றப்படும் கழிவின் அளவு நாளாந்தம் அதிகரித்துள்ளது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) முன்னைய ஆண்டின் அபிவிருத்தித் திட்டங்கள் பெறப்பட்டு முன்னுரிமை தயாரிக்கப்பட்டு எதிர்வரும் ஆண்டின் போது செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களுக்காக முறையாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மதிப்பீடு பெறப்பட்டு அதன் மதிப்பீட்டுப் பெறுமதியின் படி, பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிராததன் காரணமாக 35 தொழில்களுக்காக அமைச்சர்களின் ஏற்பாடாக ரூபா 3,200,000 தொகையும் பொது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 435,000 தொகையுமான மொத்தப் பெறுமதி பயன்படுத்தப்பட்டு பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டுப் பதிவேட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 05 வருமான விடயங்களில் 15 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையும் 06 செலவின விடயங்களில் 18 சதவீதம் முதல் 44 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சொத்து முகாமைத்துவம்**

**விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

WPLL – 6410 ஆம் இலக்க டிரம் டிரக் வண்டி 2015 பெப்ரவரி 07 ஆம் திகதி முதல் 2016 பெப்ரவரி 17 ஆம் திகதி வரை ஒரு நாள் மாத்திரம் கழிவுகள் கொண்டு செல்லப்படுவதற்காகப் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் விளைவற்று சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிர்வாகம்
(ஆ) கழிவு முகாமைத்துவம்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்